DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 185/2024 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **முருகன்** |
| Father's Name | : | துரைராஜ் |
| Village | : | புல்லாம்பட்டி |
| Taluk | : | சிங்கம்புணரி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 24/2025 |

**(வழக்கின் 2 வது எதிரி ஆஜர். 1-ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.05.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருமலைக்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா, அ.சா.2 எனதுஅப்பா, ஆஜர் 2 வது எதிரியை தெரியும். வழக்கின் 1 வது எதிரியும் தெரியும். இவ்வழக்கின் எதிரிகள் எனது சித்தப்பா ஆவார்கள். எங்களுக்குள் சொந்தமான சொத்து சம்மந்தமாக என் அப்பா, எதிரிகளான சித்தப்பாகளுக்கு இடையே ஏற்ககனவே பிரச்சினை உள்ளது. மேற்படி சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது. கடந்த 12.05.2020 தேதி மாதங்கருப்பர் கோவில் அருகே உள்ள எனது அப்பாவின் மின் மோட்டாரில் நாங்கள் தண்ணீர் பாய்ச்சிய போது வழக்கின் 1வது எதிரி ஆஜர் 2 வது எதிரியும் சேர்ந்துசொத்தை பிரித்து கொடுக்காமல் ஏன் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சிகிறாய் என பிரச்சினை செய்தார்கள். அவர்கள் பிரச்சினை செய்ததால் நாங்கள் வா்ங்கி போட்ட பியூஸ் கேரியர் மற்றும் பைப்பை பிடுங்கிகொண்டு வந்துவிட்டோம். மறுநாள் 13.05.2020 தேதி

குளத்துப்பட்டியிலிருந்து ஜாமான்கள் வாங்கிக்கொண்டு எனது அப்பாவும் எனது மாமாவான ராஜகுமாரும் டிவிஎக்சல் வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது மதியம் சுமார் 3.30 மணியளவில் மாதங்கருப்பர் கோவில் அருகே எனது அப்பாவை எதிரிகள் வெட்டியுள்ளார்கள் எனது மாமா ராஜ்குமார் எங்கள் வீட்டை நோக்கி ஓடி வரும்போது எதிரிகள் இருவரும் துரத்தி வந்தார்கள். அப்பாவை எதிரிகள் வெட்டிய விபரத்தை என்னிடம் சொல்லிகொண்டிருந்த போதே இருசக்கரவாகனத்தில் வந்த எதிரிகள் வாகனத்தை நிறுத்தி என்னை பார்த்தவுடன் ஆஜர் 2 வது எதிரி அவனை வெட்டுடா என சொல்லி இருவரும் இறங்கி வந்து என்னை வெட்ட வந்தபோது நானும் எனது மாமாவும் தப்பித்து ஓடினோம். அதிலிருந்து சுமார் கால் மணி நேரம் முதல் அரை மணி நேரம் இருக்கும் கூரை வீட்டில் இருந்த அ.சா.1 எனதுஅம்மாவையும் எதிரிகள் தலையில் தாக்கியுள்ளனர். அப்போது அங்கு என் தங்கையான சின்னமாள் என்ற தேவியும், என் பாட்டி ஆண்டிச்சி என்பவரும் அங்கிருந்தபோது எதிரிகள் தாக்கியபோது தடுத்ததில் என் பாட்டிக்கு உள்ளங்கையில் சிறிய வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. காயம்பட்ட என் அம்மாவை நான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் மற்றொரு ஆம்புலன்சில் எனது அப்பாவை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக எனது அப்பாவையும் எனது அம்மாவையும் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் பார்த்தபோது எனது அப்பாவான அ.சா.2 க்கு எதிரிகள் தாக்கியதில் இடது கையில் வெட்டுக்காயமும், தலையிலும் கழுத்திலும், தோள்பட்டையிலும், கையிலும் வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. எனது அப்பாவிற்கு தையல்கள் போடப்பட்டது. அம்மாவிற்கும் தையல்கள் போடப்பட்டது. சம்பவம் தொடர்பாக எனது அம்மாவான அ.சா.1 புகார் கொடுத்தார். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.த.சா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்றால் என் அம்மா சொன்னதை நான் எழுதினேன். போலிசார் விசாரணையில் புகாரை நான் எழுதியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் 13.05.2020 ம் தேதி தான் பியுஸ் கேரியர் மற்றும் பைப்பை கழற்றி வந்தோம் என்றாலும் மாறாக 12.05.2020 ம் தேதி கழற்றி வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொ்த்து சம்மந்தமாக உறவினர்கள் மற்றும் ஊர்க்காரர்கள் சுமார் 15 முறை பஞ்சாயத்து பேசியிருப்பார்கள் என்றால் சரிதான். வழக்கு சாட்சிப்பட்டியலில் கண்ட ராஜ்குமார், தேவி, ஆண்டிச்சி ஆகியோர் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு அருகில் தான் எதிரிகள் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் சொத்து பிரித்து கொடுக்கவில்லை என எதிரிகள், என் தாத்தாவும் பலமுறை புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவையும், எனது அம்மாவையும் எவ்வாறு தாக்கினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள ஆஜர் 2 வது எதிரி என்னை வெட்டுடா எனசொல்லி துரத்தியதை புகாரிலோ, போலிசார் விசாரணையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா, அப்பாவையும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது ஆஜர் 2 வது எதிரியும் துவரங்குறிச்சி மருத்துவமனையில் சிகிக்சையில் இருந்தார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் என் அம்மாவையும், அப்பாவையும் தாக்கவில்லை என்றாலும் என் அம்மாதான் 2 வது எதிரியின் வீட்டிற்கு சென்று 2 வது எதிரியையும் தலையில் கட்டையால் தாக்கி காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பொதுவாக உள்ள 9 ஏக்கர் சொத்து முழுவதையும் யாருக்கும் பிரித்துக்கொடுக்காமல் நாங்களே வைத்து கொண்டு அதை அபகரிக்கவேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கேனி தண்ணீர் இல்லாத கேனி என்றால் சரிதான். போர் பைப்பை கழற்ற வேண்டும் என்றால் கேனிக்குள் இறங்கி தான் கழற்ற வேண்டும் என்றால் சரிதான். ன் அப்பாவிற்கு ஏற்பட்ட காயங்கள் கேனியில் இறங்கி பைப்பை கழற்றும்போது

விழுந்தததில் ஏற்பட்டது என்றாலும் எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் நான் சொல்வது போல் என் அம்மாவை அசிங்கமாக பேசி தாக்கவில்லை என்றாலும் என் பாட்டிக்கு எந்த காயமும் இல்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் சொத்து கொடுக்காததால் அடிக்கடி சண்டை போட்டடால் எதிரிகள் வீட்டை விட்டு காலி செய்து தற்சமயம் வெளியில் வாடைக்கு வீடு பிடித்து வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்னவிதத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.05.20 05:29:58 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.